தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 23

2011 ஆகஸ்ட் 8, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ்.எஸ். கருப்பசாமி அவர்கள் 12-11-2010 அன்றும், திரு. என். சண்முகசுந்தரம் அவர்கள் 8-5-2011 அன்றும், திரு. இரா. ஆதிசுவாமி அவர்கள் 19-6-2011 அன்றும், திரு. ஜி.ஜி. குருமூர்த்தி மற்றும் திரு. மு. பரமசிவம் ஆகியோர் 26-6-2011 அன்றும், திரு. சைதை கா. கிட்டு அவர்கள் 3-8-2011 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எஸ்.எஸ். கருப்பசாமி அவர்கள் சாத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 முதல் 1991 வரை சிறப்புறப் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2011 ஆகஸ்ட் 8

திரு. என். சண்முகசுந்தரம் அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 முதல் 1967 வரை திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. இரா. ஆதிசுவாமி அவர்கள் குளச்சல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி அவர்கள் பவானி தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரையிலும், 1989 முதல் 1991 வரையிலும் சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. மு. பரமசிவம் அவர்கள் தாரமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சைதை கா. கிட்டு அவர்கள் சைதாப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 முதல் 2001 வரை சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)